2. தகவல் கோரல்

(அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்று கேட்டால் எப்படி? யாராவது ஒருவரை மட்டும் எழுந்து கேட்கச் சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *முனைவர் பொன்முடியை மட்டும் கேட்க அனுமதிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பாக இன்று சென்னையிலே மாபெரும் உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2013–2014 ஆம் ஆண்டிற்கான கரும்பு தொகை 2,000 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி, இதுகுறித்து அறிவிப்பு எதுவும் கொடுத்திருக்கிறீர்களா?*

முனைவர் க. பொன்முடி: *அதைப் பற்றிதான் பேசுகிறேன். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததுதான். அவசர முக்கியத்துவம் வாய்ந்ததுதான்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இருந்தாலும், என்னிடம் அனுமதி எதுவும் கேட்கவில்லை.*

முனைவர் க. பொன்முடி: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா?

முனைவர் க. பொன்முடி: அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொல்லிவிடுகிறேன், அவ்வளவுதான். கோரிக்கையை சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாக இரண்டு வரிகளில் சொல்லுங்கள்.

முனைவர் க. பொன்முடி: சுருக்கமாகச் சொல்கிறேன். கரும்பு டன்னுக்கு 2,850 ரூபாய் என்று அறிவித்திருந்தாலும், 2,425 ரூபாய்தான் வழங்கப்படுகின்றது. அவர்கள் 4 ஆயிரம் ரூபாய் டன்னுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். தேர்தல் வாக்குறுதியிலே 3,500 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். இந்த 2,850 ரூபாயை குறைந்தபட்சம் 3,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆக, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தினை அழைத்துப் பேசி, கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கையை நீங்கள் பணிவுடன் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) திருவிடைமருதூர் தொகுதி, அணைக்கரை ஊராட்சி, முதலை கடித்ததால் உயிரிழந்தவருக்கு நிவாரண உதவி மற்றும் முதலைப் பண்ணை அமைக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, சுருக்கமாக அதைச் சொல்லுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் ஒன்றியத்தில் அணைக்கரை ஊராட்சியில் கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் 200–க்கும் மேற்பட்ட முதலைகள் இருக்கின்றன. 3 ஆம் தேதி காலை ஏழு மணிக்கு செல்லதுரை என்பவர் குளிக்கச் சென்ற நேரத்தில் முதலை கடித்து, நீர் பகுதிக்கு இழுத்து சென்றுவிட்டது. ஒரு மணி நேரம் தேடி, மீன் பிடிக்கும் வலைமூலம் அவருடைய சடலம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு